Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 22, 2021

வியாழக்கிழமை, 22 ஜூலை 2021 | ஒளி: 07 கதிர்: 54 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்காதீர்

## ஜனாதிபதிக்கு பரிந்துரை: திருத்தங்களை மேற்கொள்ள ஆலோசனை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காது, பிரித்தானிய உள்ளிட்ட ஏனைய நாடுகளில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டங்களை ஆராய்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு,



ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளது.

தொடர்ச்சி P2




# அத்தியாவசிய 12 துறைகள் சேவைகளாக பிரகடனம்

சுகாதார சேவைகள், துறைமுகங்கள், பெட்ரோலியம், சுங்கம் உட்பட 12 துறைகளை அத்தியாவசிய சேவைகளாக மாற்றுவதை விரிவுபடுத்தும் வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜெயசுந்தர வெளியிட்டுள்ளார்.

பொதுச் சேவைகள் சட்டத்தின்படி ஜனாதிபதியின் செயலாளரால் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை ரயில்வே திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை உட்பட பொதுப் போக்குவரத்து சேவைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம சேவகர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள்,

தொடர்ச்சி P2

மாகாண பாடசாலைகள் விவகாரத்துக்கு எதிராக

# விரைவில் வழக்கு



■ என்.ராஜ், எம்.றொசாந்த்

மாகாண பாடசாலைகளை மத்திய அரசின் ஆளுகைக்கு உட்படுத்துவதற்கு எதிராக, வெகுவிரைவில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, தமிழ் மக்கள் தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது யாழ்ப்பாணம் அலுவலகத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போதுள்ள அரசாங்கமானது மாகாணங்களுக்கே உரித்தான கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களை, மாகாணங்களுக்கான அதிகாரங்களை தன் வசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றதெனச் சாடினார்.

தொடர்ச்சி P2

# டயகம சிறுமிக்கு நீதி கேட்டு ஹட்டன், டயகமவில் ஆர்ப்பாட்டங்கள்



■ எஸ்.கணேசன்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் வேலைசெய்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில், உயிரிழந்த டயகம சிறுமியின் 'மரணத்துக்கு நீதி வேண்டும்', 'குற்றவாளிகள் அனைவரும் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும்' என வலியுறுத்தி ஹட்டனிலும் சிறுமியின் சொந்த ஊரான டயகமவிலும் நேற்று (21) காலை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.



தொடர்ச்சி P2

# 'டெல்டா பரவவில்லை என காண்பிக்க முயற்சி'



டெல்டா வைரஸ் இன்னமும் சமூகத்துக்குள் பரவவில்லை எனக் காண்பிக்க சுகாதார அமைச்சு முயற்சிப்பதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்திய ஷெனால் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், முதலாவது கொரோனா வைரஸ் அலைக்குப் பின்னர், நாட்டு மக்களும் அரசாங்கமும் கொரோனா வைரஸை மறந்துவிட்டனர்.

தொடர்ச்சி P2

# 'சிறுவர் நீதிமன்றங்கள் 18 விரைவில் நிறுவப்படும்'



சிறுவர்களுக்காக, சிறுவர் நீதிமன்றங்கள் 18 ஐ அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித் தலைவர் சுஜாதா அழஹப்பெரும தெரிவித்தார்.

நாட்டின் ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் ஒன்பதையும் சிறுவர் மேல் நீதிமன்றங்கள் ஒன்பதையும் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# ஒரே நேரத்தில் இரு தடுப்பூசிகளை செலுத்திய பெண் வைத்தியசாலையில்

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில், நேற்றைய தினம் (21) பெண்ணொருவருக்கு ஒரே நேரத்தில் இரண்டு தடவைகள் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# துமிந்தவின் விடுதலைக்கு எதிராக ஹிருணிகா மனு

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமை அரசியலமைப்புக்கு முரணான விடயம் என அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்து மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

# 'நம்பிக்கையில்லாமைக்குப் பின் எதிர்க்கட்சிக்குள் பிளவு'



அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தின் வாக்கெடுப்பின் பின்னர், எதிர்க்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீண்டும் அவர்களுக்கே சென்று தாக்கியுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

கொத்தலாவல சட்டமூலம்

# ஓகஸ்ட் 6 விவாதம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலம் தொடர்பான விவாதத்தை, ஓகஸ்ட் 6 ஆம் திகதி காலை 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடத்த பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு முடிவு செய்துள்ளது.





எந்தவொரு தேர்தல் முறைமையும்

# '100க்கு நூறு சதவீதம் ஏற்கவில்லை'

■ ஜே.ஏ.ஜோர்ஜ்

"உலகில் எந்தவொரு நாட்டிலும் அங்கு நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமை 100க்கு நூறு சதவீதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை" எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 'எம்.பிக்களின் ஓய்வு வயதை அறிவிக்கவும்'



■ ஜே.ஏ.ஜோர்ஜ்

இலங்கையில் இளம் தலைமுறையினருக்கு அரசியலில் ஈடுபட அதிக சந்தர்ப்பம் வழங்கும் வகையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வுபெறும் வயது அறிவிக்கப்பட வேண்டும் என, வட மாகாண முன்னாள் ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# சு.க- ஜனாதிபதி பேச்சு ஒத்திவைப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில், நேற்று (21) நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பேச்சுவார்த்தை, எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையிலான அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவிருந்தது.

தொடர்ச்சி P2

# எங்கள் பொருளாதாரம்

# 'இராணுவத்தால் சூறையாடப்பட்டுள்ளது'

■ க. அகரன்

தமிழர்களின் பொருளாதாரம் இலங்கை இராணுவத்தால் சூறையாடப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த வவுனியா மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அதனை உருவாக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகிய நாடுகளின் உதவி தமிழர்களுக்கு தேவை என்றும் கூறி




தொடர்ச்சி P2

# தாமரை மொட்டை கைவிடுகிறது கை?



அரசாங்கத்திலிருந்து விலக வேண்டுமென, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒருபகுதியினர் அழுத்தம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவித்த அக்கட்சியின் சிரேஷ்ட உப-தவிசாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான சுதந்திரக் கட்சி, ராஜபக்ஷ ஆளுந்தரப்பால் புறக்கணிக்கப்படுகிறது என்றார். சு.கவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற அக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திலேயே மேற்கண்டவாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்




# அத்தியாவசிய 12 துறைகள் சேவைகளாக பிரகடனம்

இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்புறுதி சேவைகள், உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவ சேவைகள், லங்கா சதோசா லிமிடெட், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம், உணவு ஆணையாளர் திணைக்களம், மாகாண சபைகளின் கீழ் உள்ள அனைத்து அரச அலுவலகங்களின் சேவைகள், தபால் திணைக்களத்தின் சேவைகள் ஆகியவையே இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மாகாண பாடசாலைகள் விவகாரத்துக்கு எதிராக

# 'விரைவில் வழக்கு'

அதற்கு சிலர் துணை போகிறார்கள் எனத் தெரிவித்த அவர், சில மாயைகளை நம்பி சிலர் மாகாண அதிகாரத்தை மத்திக்கு தாரைவார்க்கும் முகமாக செயற்படுகின்றார்கள் எனவும் கூறினார்.

ஆனால், தற்போதுள்ள அரசாங்கமானது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு உட்பட்ட கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களை தனது ஆளுகைக்கு உட்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில், தாம் செவ்வாய்க்கிழமை (20) கல்வியலாளர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு, ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளதாக, விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அதாவது, 'மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளை, மத்தி தனது ஆளுகைக்குட்படுத்தப்படுவதற்கு எதிராக வெகுவிரைவில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதென தீர்மானித்துள்ளோம்' என்றார்.

# 'சிறுவர் நீதிமன்றங்கள் 18 விரைவில் நிறுவப்படும்'

'சிறுவர் துஷ்பிரயோகம், குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் ஊடகங்களின் சமூக பாதிப்பு' எனும் தொனிப்பொருளில், அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது கொழும்பு, பத்தரமுல்லை மற்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டு சிறுவர் நீதவான் நீதிமன்றங்கள் மட்டுமே உள்ளன என்று தெரிவித்த அவர், அவை போதுமானதாக இல்லை என்றும் அந்த நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் இருப்பதால் வழக்குகளை ஒத்திவைக்கும் போக்கு காணப்படுகிறது என்றார்.

# சு.க- ஜனாதிபதி பேச்சு ஒத்திவைப்பு

அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரை, அரசாங்கத் தரப்பினர், ஒரவஞ்சனையுடன் நடத்துவதாக, குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே, பேச்சுவார்த்தைக்கு திகதி குறிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்காதீர்

மனித உரிமைகள் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல், அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கையளித்தத்துள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 9, 11 மற்றும் 13ஆம் பிரிவுகள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ள ஆணைக்குழு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை கூடிய ஜனநாயக முறையில் அமுல்படுத்துவது தொடர்பான மூன்று முன்மொழிவுகளை, இடைக்கால அறிக்கை ஊடாக முன்வைத்துள்ளது.

இச் சட்டத்தின் 9ஆவது பிரிவின் ஊடாகத் தடுத்து வைத்தல் நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது, குறைந்தது மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் மீது குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்து வழக்குகளை விசாரணை செய்து முடிப்பது தொடர்பிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# டயகம சிறுமிக்கு நீதி கேட்டு ஹட்டன்- டயகமவில் ஆர்ப்பாட்டங்கள்

ஹட்டனில், தொழிலாளர் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்துக்கு முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தலைமையேற்றார். தொழிலாளர் தேசிய முன்னணியின் பிரதித் தலைவர், மகளிர் அணி உறுப்பினர்கள் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் போராட்டத்தில் பங்கேற்று, நீதிக்காக குரல் எழுப்பினர்.

"டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும், இது விடயத்தில் சட்டம் உரிய வகையில் செயற்பட வேண்டும். நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புபட்ட குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்." என போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதோடு, பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், மலையகத்திலிருந்து சிறார்களை எவரும் வேலைக்கு அமர்த்தக்கூடாது, அவர்களுக்கான கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குரல் எழுப்பினர்.

இந்நிலையில், சிறுமியின் ஊரான ஈஸ்ட் தோட்டத்தில், அத் தொழிலாளர்கள், தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக, ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

# 'டெல்டா பரவவில்லையென காண்பிக்க முயற்சி'

இரண்டாவது அலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தபோது, தமிழ் -சிங்கள புதுவருட காலத்தில் மீண்டும் கொரோனா வைரஸை அனைவரும் மறந்திருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

டெல்டா வைரஸ் இன்னமும் சமூகத்தில் பரவவில்லை என காண்பிக்க சுகாதார அமைச்சு முயற்சிப்பதாகவும் குற்றஞ்சுமத்திய அவர், நாட்டின் சட்டங்களில் அமலில் இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதால், மீண்டும் கொரோனா வைரஸ் அலை ஏற்படுவதைத் தடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சால் வழங்கப்படும் கொரோனா வைரஸ் தொடர்பான பாதுகாப்பு ஆலோசனைகள் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பு எனவும் தெரிவித்தார்.

# 'இராணுவத்தால் சூறையாடப்பட்டுள்ளது'

வவுனியா மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், போராட்டம் மேற்கொள்ளும் இடத்தில், நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், சீனர்கள் தங்கள் கடல் அட்டைப்பண்ணையை கிளிநொச்சிக்கு கொண்டு வர முடிந்தால், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா நம் தாயகத்திலும் பல்வேறு பொருளாதார திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றனர். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் பொருளாதார முதலீட்டை நாங்கள் வரவேற்கிறோமெனத் தெரிவித்த அவர்கள், இந்த முதலீடுகள் தங்களுக்கு மிகவும் தேவையானது எனவும் கூறினர்.

# துமிந்தவின் விடுதலைக்கு எதிராக ஹிருணிகா மனு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, குறித்த அடிப்படை உரிமை மனுவொன்றை, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன், மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கான ஜனாதிபதியின் உத்தரவை ரத்துச் செய்யுமாறு, ஹிருணிகா பிரேமச்சந்திர கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், நீதி அமைச்சர் உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# 'நம்பிக்கையில்லாமைக்குப் பின் எதிர்க்கட்சிக்குள்...

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைத்து வாசிக்க வேண்டும். அது மரிக்காருக்குத் தெரியவில்லை. கபிர் ஹாசீமும் அதனை உறுதிப்படுத்தி வாசிக்கவில்லை. எனவே, சட்டரீதியாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வலுவற்றது. ஆனாலும், இந்தப் பிரேரணையை கொண்டு வந்த முறை தவறு என்ற போதிலும் அதற்கு முகங்கொடுக்க பிரதமர் தயார் என்றார்.

எனவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எதிர்க்கட்சிக்கே நம்பிக்கை இழப்பு ஏற்பட்டதே தவிர, அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் ரிஷாட் பதியுதீனுக்காக, முஜிபுர் ரஹ்மான் பேசியபோது, வேலுகுமார், மனோ கணேசன், திகாம்பரம் உள்ளிட்டவர்கள் கைதட்டினார்கள். இவர்கள் மூவரும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு வந்தவர்கள். மலையக சிறுமி ரிஷாட்டின் வீட்டில் மரணித்துள்ள போதிலும் முஜிபுர் ரஹ்மானின் பேச்சுக்கு கைத்தட்டினார்கள்.

எனவே, தமிழ் ஊடகங்களுக்கு தமது புகைப்படங்களை பிரசுரித்துக்கொள்வதற்காக அவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் முறையிட்டு புகைப்படம் எடுத்துக்கொண்டார்களே தவிர, இவர்களுக்கு அச்சிறுமி குறித்து உண்மையான அக்கறையில்லை. எனவே, இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றுபவர்களை அடையாளம் கண்டுகொள்ளும்படி, தான் மலையக மக்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

# ஒரே நேரத்தில் இரு தடுப்பூசிகள்.....

கண்டி- ஒகஸ்டாவத்த மத்தியநிலையத்திலேயே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட பெண்ணுக்கு, தடுப்பூசி ஏற்றிய சிறிது நேரத்தில் மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவருக்கு அங்கு ஆரம்ப சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து அந்தப் பெண், வீட்டுக்குச் சென்ற பின்னரும் மயக்கம் ஏற்பட்டதையடுத்து, அவர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே, அவருக்கு கொரோனா தடுப்பூசி 2 தடவைகள் ஒரே நேரத்தில் செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், அப்பெண்ணின் கணவரால் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வாறு குறித்த மத்திய நிலையத்தில் ஒரே நேரத்தில் 2 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை தொடர்பான தகவல் பதிவாகியுள்ளதென, மத்திய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# 'எம்.பிக்களின் ஓய்வு வயதை அறிவிக்கவும்'

இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் இணைய வழியில் நேற்று (21) ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச சேவையில் ஏனையவர்களுக்கு ஓய்வுபெறும் வயதெல்லை காணப்படுகிறது. எனினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறான ஒரு நிலை இல்லை. எனவே, இளம் தலைமுறையினருக்கு வழிவிடும் வகையில் இவ்வாறான ஒரு சட்டத்தை ஏற்படுத்துவது சிறந்தது என்றார்.

அத்துடன், அரசியலில் இளைஞர்களுக்கு இருக்கும் வாய்ப்புகளை அரசியல்வாதிகள் தமது வாரிசுகள், குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களுக்கு வழங்கும் நிலையில், அந்த நிலை மாறி ஏனைய சாதாரண இளைஞர்களுக்கும் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதேநேரம், தெற்கில் உள்ள ஊடகங்கள் வடக்கு மற்றும் தமிழ் மக்கள் தொடர்பில் சில செய்திகளை இனவாதத்துடன் வெளியிடும் நிலை மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்ட அவர், வடக்கில் இடம்பெறும் நல்ல விடயங்களையும் தெற்கு ஊடகங்கள் செய்தியாக வெளியிடவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதேநேரம், தான் ஆளுநராக செயற்பட்ட குறுகிய காலப்பகுதிக்குள் வடக்கில் எந்தவித சட்டவிரோத குடியேற்றத்துக்கும் இடமளிக்கவில்லை என்றும், மக்களுக்கு நன்மையளிக்கும் பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# '100க்கு நூறு சதவீதம் ஏற்கவில்லை'

இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் இணைய வழியில் நேற்று (21) ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, அவர் இதனைக் கூறினார்.

வட்டார முறையினால் பிரதிநிகளின் அதிகரிப்பு மாத்திரமே இடம்பெறுவதுடன், அவர்களால் காத்திரமான பலன்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளதாகக் கூறிய அவர் இங்கிலாந்து, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இதனை அவதானிக்க முடிவதாகவும் தெரிவித்தார்.

பொதுவாக பாராளுமன்றில் நூற்றுக்கு 65 சதவீத அதிகாரத்தைப் பெற்று ஆட்சிபுரியும் நிலையொன்று உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இலங்கைக்கு விகிதாசார முறையிலான தேர்தல் முறைமை சிறந்தாக அமையும் என்றாலும், மக்கள் தமது பிரதேசங்களில் இருந்து பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று நினைப்பதாக அவர் தெரிவித்தார்.

எனவே, கலப்பு விகிதாசார தேர்தல் முறைமை இலங்கைக்கு சிறந்தது என்பதே தனது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் தெரிவித்தார். ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இவர் இதனைக் கூறினார்.

அதேவேளை, ஊடகவியலாளர்களின் கைகளிலேயே நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் தங்கியுள்ளதாகவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மக்களின் வாக்குரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் முக்கிய பொறுப்பு ஊடகவியலாளர்களிடம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அதனை அரசாங்கத்துக்கு எதிரான குழுக்களாக நினைக்க கூடாது என்று கூறிய அவர், இந்த இரண்டு துறையினரும் ஜனநாயக நாட்டில் முக்கியமானவர்கள் என்றார்.

இதேவேளை, சிறுமிகள், பெண்களுக்கு எதிராக அண்மைக்காலமாக இடம்பெறும் பாலியல் குற்றங்கள் தொடர்பில், சம்பவம் இடம்பெற்ற பின்னர் எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் எழுப்புவதைவிட சம்பவங்கள் இடம்பெறும் முன்னதாக பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே சிறந்தது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், விசேட தேவையுடைவர்களின் உரிமைகள், பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உள்ளிட்ட விடயங்களிலும் ஊடகவியலாளர்கள் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் என்பவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையானவர்களாக இருக்க வேண்டும் என்று கூறிய அவர், உண்மைகளை வெளிப்படுத்தவும், அதனைக் கூற முடிந்த நபராக ஊடகவியலாளர்கள் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# தாமரை மொட்டை கைவிடுகிறது கை?

ஒன்று அரசாங்கத்திலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக வெளியேற வேண்டும். இல்லை என்றால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குமாறு கூறிவிட்டு, கட்சியின் ஏனையவர்கள் அரசாங்கத்திலிருந்து விலகி கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டுமெனவும் அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது என்றார்.

அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தாலும், அரசாங்கத்தில் நம்மை இணைத்துக்கொள்ளவில்லை. அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் இறுதியில் எமக்கு என்ன கிடைத்தது எனவும் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ இதன்போது வினவியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆயிரத்துக்கும் அதிகமான பிரதேசசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குக் கூட நிதி ஒதுக்கீடு செய்வதில்லை எனவும் தெரிவித்த அவர், ஆளுங்கட்சியினருக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, 20 இலட்சம் ரூபாய் நிதியை அரசாங்கம் ஒதுக்குகின்ற போதிலும், சு.கவினருக்கு அந்த நிதி கிடைப்பதில்லை .

இந்த விடயங்களை சு.கவின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர வெளிப்படையாகக் கூறினார். அதன் பின்னர் அவரை ஆளுங்கட்சியினர் விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். எமது கட்சியில் உள்ள எவரும் தயாசிறிக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை. எனவே, அரசாங்கத்தில் நீங்கள் இருங்கள். நாங்கள் அரசாங்கத்திலிருந்து விலகி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்காகப் பணியாற்றுகிறோம் எனவும் தெரிவித்துள்ளார், தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான பங்காளி, கையை சின்னமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகங்களை மறைத்து முகங்களை காண்பித்தனர்



அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தை கண்டித்தும், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர், திவுலப்பிட்டியவில், நேற்று (21) ஆர்ப்பாட்டம் நடத்தினர். (படங்கள்: பிரதீப் பத்திரண)

## ‘எவோட்ஸ் 2021’ சிறுகதைப் போட்டி

கலை, இலக்கியத்துறைகளில் இளம் ஆர்வலர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் ‘எவோட்ஸ் - 2021’ கலை, கலாசாரப் போட்டி தொடரின் ஜூலை மாதத்துக்கான போட்டியாக, புதிய அலை கலை வட்டத்தின் சர்வதேச இணைப்பாளர் டன்ஸ்டன்மணியின் தாயார் திருமதி ஜெயமணி ஞாபகார்த்தப் போட்டியாக, சிறுகதை எழுதும் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வோர், தமக்கு விருப்பான கருப்பொருளில் கதைகளை எழுதலாம், ஒருவர் ஒரு சிறுகதைப் பிரதியை மட்டுமே அனுப்பவேண்டும், இந்தச் சிறுகதை முன்னர் எத்தகைய ஊடகங்களிலும் வெளிவந்தவையாக இருக்கக்கூடாது, ஒவ்வொரு சிறுகதையும் 500 சொற்களுக்குக் குறையாமலும், 800 சொற்களுக்கு மேம்படாமலும் இருத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனுப்படும் சிறுகதைப் பிரதியுடன், சொந்தப்பெயர், புனைபெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள், வங்கி கணக்கு இலக்கம் போன்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். சிறுகதைப் பிரதிகள் கட்டாயம் ‘பாமினி பொன்டில்’ டைப் செய்து இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

https://www.facebook.com. puthiyaalaikalaivaddam1980@ gmail.com என்ற பக்கத்தின் ஊடாகவும், puthiyaalai என்ற வட்சப் குழு ஊடாகவும், puthiyaalaikalaivaddam1980@gmail. com என்ற இமெயில் முகவரியூடாகவும் அனுப்பி வைக்கமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு 0776274099, 0777412604, 0753877163 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேரணை மீதான வாக்கெடுப்பு:

# ‘செய்தியொன்றை வெளிக்காட்டியுள்ளது’

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

ராஜபக்ஷ குடும்ப ஆட்சி இன்றும் பலமாக இருப்பதான செய்தியை நேற்று முன்தினம் (20) நடைபெற்ற வாக்கெடுப்பு கூறுகின்றது என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில, நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர், இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், பெற்றோல் விலை உயர்வுக்கு அமைச்சரே பொறுப்பு என்ற வகையில்தான் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தது.



அவர்தான் பொறுப்புக் கூற வேண்டும் என்றால், அது நிச்சயமாக இல்லை. அதற்கு அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும்.

ஆனாலும் எதிர்த்தரப்பிலே இருந்தவர்கள் முழுமையான ஆதரவைத் தெரிவித்திருந்தால், அரசாங்கம் அந்த எதிர்ப்பைப் பார்த்திருக்கும். ஆனால், இப்பொழுது அவர்களுக்கு இருந்த வாக்குகளைவிட, அதாவது நான் அறிந்தவகையில், 149 வாக்குகள் ஆளும் கட்சி தரப்பில் இருக்கக்கூடியது. ஆனால், 152 வாக்குகளைப் பெற்றிருக்கின்றார்கள். அவ்வாறாக இருந்தால், எதிர்த்தரப்பில் இருந்த சிலரும் அவர்களுக்குச் சார்பாக வாக்களித்து இருக்கின்றார்கள் என்றே கருத வேண்டும்.

முற்றாக, இப்பொழுது ராஜபக்ஷ குடும்ப ஆட்சி தொடர்பில் இந்த வாக்கெடுப்பு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கின்றது. அதாவது, ராஜபக்ஷ குடும்ப ஆட்சி என்பது, இன்னும் பலமாகவும், அசைக்க முடியாதவாறும் இருக்கின்றது என்ற செய்தியைக் காட்டி நிற்கின்றது எனவும், சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

## கங்காராம விஹாரையில்...





கொழும்பு–2 கங்காராம விஹாரையில் ஆதி சிவன் கோவிலில் விஷாலாட்சி அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது. அகில இலங்கை ஸ்ரீ சாந்ஸ்வரூபன் யாத்திரீகர் குழுவின் தலைவரும் குரு சுவாமியுமாகிய ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில், கடந்த வியாழக்கிழமை (15) நடைபெற்ற இந்தக் கும்பாபிஷேகத்தில், சிவஸ்ரீ கனகபாலச்சந்திர சிவாச்சாரியார் பூஜை வழிபாடுகளை நடத்தினார்.

## நீதிமன்றில் ஸ்கூட்டி திருடியவர் கைது

■ என்.ராஜ், எம். றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

மல்லாகம் நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றுக்கு வருகை தந்தவரின் மோட்டார் சைக்கிளைத் திருடியவர், தெல்லிப்பழை பொலிஸாரால், நேற்று (21) கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த ஒருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் - 1, சைக்கிள்கள் -4 , அலைபேசிகள் -3 , வாள் - 1 என்பன கைப்பற்றப்பட்டன.

அண்மையில், மல்லாகம் நீதிமன்ற நடவடிக்கைக்காக வந்திருந்த ஒருவர், தனது 3 அலைபேசிகளை ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளின் இருக்கைக்கு கீழான தொட்டியில் வைத்து பூட்டிவிட்டு நீதிமன்றுக்குள் சென்றுள்ளார்.

வழக்கு முடிவடைந்து வெளியே வந்து பார்த்த போது, மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. இது தொடர்பில், அவர் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக, கொள்ளை, திருட்டு வழக்குகள் நீதிமன்றில் நிலுவையிலுள்ளன.

அத்துடன், சந்தேக நபரிடமிருந்து திருட்டுப்பட்ட அலைபேசிகளை வாங்கி உடமையில் வைத்திருந்த மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 40 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## ‘கை’யில் கைகளை வைத்தவர் கைது

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி சாதனத்துக்கான செப்பு கம்பியைத் திருடிய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு- 10 பகுதியை சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (21) தெரிவித்தார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தவுள்ளதாகக் கூறிய அவர், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சின்னம் ‘கை’ என்பது குறிப்பிடத்தக்கது.

## மோசமான விளைவுகள் டெல்டாவால் ஏற்படலாம்

### ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

டெல்டா கொரோனா வைரஸ் பரவுவதற்கு இடங்கொடுக்கப்பட்டால், அந்த வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவுமென எச்சரிக்கும் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், வைரஸ் பரவுவதற்கு இடங்கொடுக்காவிட்டால், வைரஸ் பரவாது எனவும் தெரிவித்துள்ளார்.

சமூக இடைவெளியை பேணுதல், கைகளை அடிக்கடி கழுவுதல், முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை தொடர்ந்து பின்பற்றினால், வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு எனவும் தெரிவித்த அவர், இல்லை என்றால், ஏனைய வைரஸ்களை விட டெல்டா வைரஸ் வேகமாகப் பரவும். இதனால் மோசமான விளைவுகள் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் தொற்றியவர்களுக்கு பெரும்பாலும் விசேடமான நோய் அறிகுறிகள் தென்படுவதில்லை. மாறாக, சாதாரண நோய் அறிகுறிகளே



தென்படும். எனினும் நோயால் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் டெல்டாவில் அதிகம்.

உலகில் உள்ள 193 நாடுகளில் 96 நாடுகளில் டெல்டா வைரஸ் பரவியுள்ளது. எனவே கொரோனா வைரஸ் தொடர்பில் அமலில் உள்ளக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது, அதனை அத்தியாவசியத் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் பதில் தூதுவரிடம்

## கிழக்கு யோசனைகளை கையளித்தார் வியாழேந்திரன்

இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ், கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய கல்வி, சுகாதார, பொருளாதார, விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான யோசனைகளை இலங்கைக்கான இந்தியாவின் பதில் தூதுவர் வினோத் கே ஜேகப்பிடம், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கையளித்துள்ளார்.

பதில் தூதுவரின் இல்லத்தில்



நடைபெற்ற சந்திப்பின்போதே வியாழேந்திரன் இந்த யோசனைகளை தூதுவரிடம் கையளித்துள்ளார்.

மேலும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட உள்ள உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மிக விரைவில் முன்னெடுப்பதற்கான யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி யோசனைகளுக்குத் தான் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக இதன்போது இலங்கைக்கான இந்தியாவின் பதில் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

## ராஜபக்ஷர்களிடையே விரிசலை ஏற்படுத்த முயற்சி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நிதி அமைச்சு பறிக்கப்பட்டு, பெசிலுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கருத்துத் தவறென தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், ராஜபக்ஷர்களிடையில் முரண்பாடுகளை உருவாக்க எதிர்க்கட்சியினர் இதுபோன்ற



கருத்துகளைப் பரப்பி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ள சாகர காரியவசம், புதிய நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியதும் எரிபொருள் விலை குறைக்கப்படுமென எவராவது கூறியிருந்தால், அது அரசியலுக்காக தெரிவிக்கப்பட்ட கருத்தாகும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நிதி அமைச்சு பறிக்கப்பட்டு, பெசில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் கதை ஒன்றை உருவாக்கி, முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

பெசில் ராஜபக்ஷ திறமையானவர். அவர் சிறந்த முறையில் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிப்பார் என்பதாலேயே அவருக்கு நிதி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. மாறாக, பிரதமரிடமிருந்து நிதி அமைச்சு பறிக்கப்பட்டு பெசிலுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.


விற்பனைக்கு

சிறுவிளம்பரங்கள்

டைல் பதிப்போர் மற்றும் மேசன்கள் தேவை, சம்பளம் ரூபாய் 70,000 க்கு மேல், மேலதிக கொடுப்பன உண்டு. தொடர்புகளுக்கு 0783307979, 0760095539.

கொழும்பு 02, இல் அமைந்திருக்கும். CLEARING and FORWARDING co க்கு வெற்றிடங்கள் உள்ளன.

WHARE CLEARK WITH 05 YEAR EXPERIENCE WITH CHA RUP ‘A’ PASS, ACCOUNTS EXECUTIVE WITH YERS EXPERIENCE AGE BELOW 35, HEAVY VEHICLE DRIVER WITH MAHAPOLA CERITFICATE HEAVY VEHICLY MACHANIC. தொடர்புக்கு: 0777715441 murali@monomilines.com

வினாத்தாள் கசிந்த போட்டிப் பரீட்சையை

# மீண்டும் நடத்த ஆளுநர் உத்தரவு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

வினாத்தாள் கசிந்ததாகச் சர்ச்சை எழுந்த போட்டிப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக எச்.என்.டி ஆங்கில உயர் டிப்ளோமா பட்டம் பெற்ற மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சையே இவ்வாறு மீண்டும் நடத்தப்படவுள்ளது.

முன்னர் நடத்தப்பட்ட பரீட்சையின் போது, வினாத்தாள் வெளியிடப்பட்டதாக மாணவர்கள் அளித்த முறைப்பாடுகளுக்கு அமைய,



அறிக்கையை பரிசீலித்த பின்னர், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து வினாத்தாள் கசிந்ததாக வந்த முறைப்பாடுகளை பரிசீலித்த பின்னர், முறையான விசாரணைகளை நடத்த ஆளுநர், சி.ஐ.டிக்கும் உத்தரவிட்டிருந்தார்.

எனவே, புதிதாக மீண்டும் பரீட்சையை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு 2021 அக்டோபர் 15ஆம் திகதிக்கு முன் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் மாகாண பொது சேவை ஆணைக்குழுவுக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில், இந்தப் பரீட்சையை ஆங்கிலத்தில் மட்டுமே நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எழுத்துப் பரீட்சையின் முடிவுகள் 10.09.2021 க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், நடைமுறை பரீட்சை அக்டோபர் முதல் வாரத்துக்குள் முடிக்கப்பட்டு ஒட்டுமொத்த முடிவும் வெளியிடப்பட வேண்டும் என்றும் மாகாண பொது சேவை ஆணையகத்துக்கு ஆளுநர் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

# வைத்தியர் குழு கள விஜயம்

■ வி.சுகிர்தகுமார்

சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தலைமையிலான குழுவொன்று, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கான கள விஜயத்தை, நேற்று மேற்கொண்டிருந்தது.

சுகாதார அமைச்சின் குழுவினரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம். அஸாத் தலைமையிலான வைத்தியசாலையின் பணிக் குழுவினர் வரவேற்றனர்.

இதன்போது, புதிதாக மறுசீரமைப்புச் செய்யப்பட்ட வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவு, சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகத்தால் திறந்து வைக்கப்பட்டதுடன், அப்பிரிவுக்கான ஒரு தொகுதி உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

வைத்தியசாலையின் வளாகத்தில் மரக்கன்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் நடப்பட்டது.

மேலும், வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை குறித்தும் உடனடித் தேவைகள் குறித்தும் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம். அஸாத் தலைமையிலான வைத்தியசாலையின் பணிக் குழுவினரால், சுகாதார அமைச்சின் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், மகஜரும் கையளிக்கப்பட்டது.



# போதைப்பொருள் விவகாரம்; மூவர் கைதாகினர்

■ எம் எஸ் எம் நூர்தீன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் உட்பட ஐஸ் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட இருவர் அடங்கலாக மூவர், நேற்று முன்தினம் (20) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாலமுனை பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து ஹெரோய்ன், ஐஸ் ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபரிடம் இருந்து 4 கிராமும் 250 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் ஒருவரிடமிருந்து ஒரு கிராமும் 430 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மற்றொருவரிடமிருந்து 490 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.



சிறுவர்களை வேலைக்கு அமர்த்தலுக்கு

# வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கம் கடும் கண்டனம்

■ வா.கிருஸ்ணா

சிறுவர்களை வீட்டுவேலைக்கு அமர்த்தல், பாலியல் துஷ்பிரயோகம், அவர்களுக்கான பாதுகாப்பின்மை தொடர்பான பல விடயங்களை வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

டயகம சிறுமியின் மரணம், இலங்கைக்கு அதிர்ச்சியைத் தரும் செய்தியாகும். இலங்கையில் சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தல், துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு எதிராகக் கடுமையான சிறுவர் சட்டம் இருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் சிறுமியை வீட்டுவேலைக்கு அமர்த்தியிருப்பது முதலாவது குற்றமாகும்.

அத்தோடு, அச்சிறுமி சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளமை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு உள்ளமை பாரிய குற்றச் செயல்களாகும்.

இச்சிறுமியின் இழப்பு, ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பு என்பதை நாம் மனதில்




**" சிறுமியின் குடும்பத்தாருக்குக் கிடைக்க வேண்டிய நீதியைக் கிடைக்கச் செய்தலும் வீட்டுவேலைத் தொழிலுக்கான வயதெல்லை, கொடுப்பனவு, விடுமுறை, பாதுகாப்பு உட்பட்ட பொறிமுறைகளையும் அரசு உடனடியாக கொண்டு வந்து, இவ்வாறான சம்பவங்கள் மேலும் நிகழாமல் தடுக்க வேண்டும் எனவும் துண்டுப்பிரசுரத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.**

கொள்ள வேண்டும். இச்சிறுமியின் மரணமானது, இலங்கைக்கான கடைசிப் படிப்பினையாக அமைய வேண்டும்.

அதுமட்டுமன்றி, இதற்குக் காரணமானவர்கள் உடனடியாக குற்றவியல் சட்டத்துக்குள் கொண்டு வந்து நிறுத்தி, அவர்களுக்குத் தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதுடன், சிறுமியின் குடும்பத்தாருக்குக் கிடைக்க வேண்டிய நீதியைக் கிடைக்கச் செய்தலும் அரசின் பாரிய பொறுப்பாகும். இதன் முதற்படியாக, வீட்டுவேலைத் தொழிலுக்கான வயதெல்லை, கொடுப்பனவு, விடுமுறை, பாதுகாப்பு உட்பட்ட பொறிமுறைகளையும் அரசு உடனடியாக கொண்டு வந்து, இவ்வாறான சம்பவங்கள் வீட்டுவேலைத் தொழிலில் மேலும் நிகழாமல் இருப்பதற்கு ஆவன செய்யவேண்டும் எனவும் துண்டுப்பிரசுரத்தின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதம செயலாளரின் நியமனம்: தமிழ் மக்களின் இருப்பை

# எதிர்காலத்தில் கேள்விக்குறியாக்கும்


■ என்.ராஜ்

வடக்கு மாகாண பிரதம செயலாளராக சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டமையானது, எதிர்காலத்தில் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்குமென, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது யாழ்ப்பாணம் அலுவலகத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வடக்கு மாகாணத்தில், தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றார்கள் எனவும் அவ்வாறான ஒரு பிரதேசத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரை இந்த அரசாங்கமானது பிரதம செயலாளராக நியமித்துள்ளமை என்பது எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாக காணப்படுகின்றது.

அதாவது, பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டிருப்பவர் தமிழ் வாசிக்கவோ, எழுதவோ முடியாத நிலையில், அவர் எவ்வாறு வடக்கு மாகாணத்தில் செயற்படப்போகிறார் என்பது ஒரு கேள்வியாக



காணப்படுகின்றதெனவும், விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண பிரதம

# செயலாளருக்கு வரவேற்பு

■ க.அகரன்

வவுனியா மாவட்டச் செயலாளராக கடமையாற்றி வட மாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ள சமன் பந்துலசேனவுக்கு, வவுனியாவில் நேற்று (21) வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேலதிக மாவட்டச் செயலாளர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், சமூக ஆர்வலர்கள், பொதுஅமைப்புகள், அரச உயர் அதிகாரிகள், மதகுருமார்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கருத்துரைத்த வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மாவட்டச் செயலாளராக கடமையாற்றிய குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தனக்கு பக்கபலமாக செயற்பட்ட அரச அதிகாரிகள், அரசியலவாதிகள், பொது அமைப்புகள், ஊடகத்துறையினருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

வடக்கின் பிரதம செயலாளராக கடமை ஏற்கவுள்ள நிலையில், வடமாகாண மக்களுக்கு இனமத பேதமற்று தனது சேவையை, பணிகளை முன்னெடுப்பதாகவும் கூறினார்.



வடமாகாண பிரதம செயலாளராக

# தகுதி வாய்ந்த ஒருவரை நியமிக்கவும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

நியமனம் என்பது நிச்சயமாக எதிர்கால அபிவிருத்திக்கு உகந்தது அல்ல என்பதை சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொண்டு, அரசாங்கத்திடம் இந்த விடயங்களை எடுத்து கூறி, வட மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவரை மாற்றி, தகுதிவாய்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என, ஈ.பி.ஆர்.எஸ்.எப் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், பல அனுபவம் வாய்ந்தவர்கள் இங்கு இருக்கின்ற நிலையில், சகல நியமங்களையும் கடந்து விருப்பம் இல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு இடமாற்றம் கேட்டதாகவும் ஒரு செய்தி அடிபடுகிறது.

இவ்வாறான நியமனம் என்பது வேலைகளை பின்னடைய செய்யும் என்பதுடன்,



**" இவ்வாறான நியமனம், வேலைகளை பின்னடைய செய்து, அபிவிருத்திகளையும் பின்னடைய செய்யும். மொழி என்பது முக்கியமான விடயம். ஆகவே 95 சதவீதம் தமிழ் மக்களைக் கொண்ட மாகாணத்தில் இவ்வாறான நியமனம் என்பது, சகல விடயங்களையும் பின்நோக்கி நகர்த்துவதாகவே இருக்கும்**

அபிவிருத்திகளையும் பின்னடைய செய்யும். மொழி என்பது முக்கியமான விடயம். ஆகவே 95 சதவீதம் தமிழ் மக்களைக் கொண்ட மாகாணத்தில் இவ்வாறான நியமனம் என்பது, சகல விடயங்களையும் பின்நோக்கி நகர்த்துவதாகவே இருக்கும்.

எனவே, இந்த நியமனம் என்பது மீள் பரிசீலணைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும், சுரேஷ் தெரிவித்தார்.

ரூ. 8 இலட்சம் பெறுமதியான

# முதிரைக்குற்றிகள் 24 மீட்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 முதிரை மரக்குற்றிகள், பூநகரி பொலிஸாரால், நேற்று (21) அதிகாலை மீட்கப்பட்டுள்ளன.

இலுப்பக்கடவையில் இருந்து டிப்பர் வாகனத்தில் கருங்கற்களால் மறைத்து மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, பொலிஸாரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, நேற்று அதிகாலை, சங்குபிட்டி பாலத்தருகில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் வைத்து குறித்த டிப்பர் வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அதில், கருங்கற்களால் சூட்சுமமாக மறைத்து மரக்குத்திகள் எடுத்து செல்லப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பூநகரி பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் சாரதி கைது செய்யப்பட்டு, பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த மரக்குற்றிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து செல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



பாலம் புனரமைக்கப்பட்டால்

# வெளிச்சம் ஏற்படுத்தப்படும்

■ நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படாமல், மின்சாரம் மூலமோ, சூரிய மின்கலம் மூலமோ வெளிச்சம் ஏற்படுத்துவது சாத்தியமானது அல்ல என, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வட்டுவாகல் பாலத்தில் வெளிச்சம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாக உள்ள போதிலும், கடந்த பத்து ஆண்டுகளாக பாலம் புனரமைப்பதற்கான திட்டமிடல்கள், முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் புனரமைப்பு முயற்சிகள் இதுவரை தொடங்கப்படவில்லை எனவும் கூறினார்.

இந்நிலையில், பிரதேச சபை வட்டுவாகல் பாலத்துக்கு வெளிச்சம் பொருத்த வேண்டும் என்ற செயற்பாடு முன்னெடுக்க முடியாது உள்ளதாகத் தெரிவித்த அவர், காரணம், வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்பட்டாலே வெளிச்சம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க முடியுமென்றும் கூறினார்.

டயகம சிறுமியின் மரணம்

# ‘மர்மமாகவே இருக்கின்றது’

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

“டயகம சிறுமியின் மரணம் மர்மமாகவே இருக்கின்றது. ஒரே நாடு; ஒரே சட்டம் என்ற ரீதியில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட்டு, சிறுமியின் மரணத்துக்கு நியாயம் பெற்றுத்தரப்பட வேண்டும்” என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்

முறையான தொழில்வாய்ப்பு மலையகத்தில் காணப்படுமேயானால், இச்சிறுமியைப் போன்று பாதிக்கப்படும் பல சிறுவர்கள், பெண்கள் காப்பாற்றப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (21) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், “தரகர்களின் மூலம் மலையக சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் தலைநகரில் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்கின்றார்கள்.

“சிறுவர்களை வேலைக்கு அமர்த்த முடியாது என்ற சட்டம் நாட்டில் கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நடந்து கொண்டே இருக்கின்றன.

“எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். தகுதி தராதரம் பாராமல் குற்றவாளிகள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.

“சிறுமி மரணித்து ஐந்து நாள்கள் கடந்துவிட்டன. பாராளுமன்றத்தில் வாத, விவாதங்கள் இடம்பெற்றுள்ளதுடன், ஆங்காங்கே மக்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இருப்பினும், இன்றளவும் சரியான முடிவு எட்டப்படவில்லை. நியாயமும் பெற்றுத்தரப்படவில்லை.

“எனவே, முறையான தொழிலும் சரியான ஊதியமும் மலையகத்தில் அவர்களுடைய வீடுகளுக்கு அருகிலேயே கிடைக்குமேயானால், அவர்கள் வீட்டில் இருந்தவாறே வேலைக்குச் செல்வார்கள்.

“அவ்வாறான சூழ்நிலையை அரசாங்கம் அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்து இருக்க வேண்டும். அவ்வாறு இருந்திருந்தால், இத்தகைய கொடூரமான சம்பவங்கள் நடைபெற்றிருக்காது” என்றார்.



# கரணம் அடித்த ஓட்டோ; சாரதி வைத்தியசாலையில்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கினிகத்தேனையிலிருந்து கம்பளை வரை அதிக வேகத்துடன் பயணித்த ஓட்டோ, விபத்துக்குள்ளானதில், ஓட்டோ சாரதி காயமடைந்து, நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை- நாவலப்பிட்டி பிரதான வீதியின் மீப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று (21) பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத ஓட்டோ, லொறியொன்றுடன் மோதிய நிலையில், ஓட்டோவுக்குப் பின்னால் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் ஓட்டோ கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும், ஓட்டோ சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் என்றும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி துஷ்பிரயோகம்;

# அரச உத்தியோகத்தர் கைது

■ பாலித ஆரியவன்ஸ

15 வயது சிறுமி ஒருவரை அரச விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்று, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 29 வயது இளைஞன் ஒருவர், பதுளை பொலிஸாரால் நேற்று (21) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளைக்கு அண்மையிலுள்ள பிரதேச செயலகமொன்றில் கடமையாற்றும் மேற்படி சந்தேகநபர், சொரன்தொட்ட- வத்தேகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



# பிந்தெனிய தோட்டப்பாதை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

■ ரா.கமல்

கேகாலை, பிந்தெனிய தோட்ட மேல்பிரிவுக்குச் செல்லும் பாதை நீண்ட நாள்களாக குன்றும் குழியுமாக காணப்படுவதோடு, போக்குவரத்துக்கும் பெரும் சிக்கலாக அமைந்திருந்தது.

இதனால், இப்பாதையை செப்பனிட்டுத் தருமாறு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவரும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அண்ணாமலை பாஸ்கரனின் கவனத்துக்குத் தோட்ட மக்கள் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து, பாஸ்கரனின் வேண்டுகோளுக்கு இணங்க, தோட்ட உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால் பாதை நிர்மாணப் பணிக்காக முப்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, பாதை செப்பனிடும் பணியை, பாஸ்கரன் நேற்று (21) ஆரம்பித்து வைத்தார்.









# அலங்கார உற்சவம்...

பதுளை, ரொக்கில் ஸ்ரீ காளியம்மன் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம், நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற பூஜைகளையும் அம்பாள் உள்வீதி உலா வருவதையும் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் க. ஜெயநாயகம், செயலாளர் ஆர்.எம். கிருஸ்ணசாமி உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எம். செல்வராஜா)



# தனி வீடுகளுக்கான அடிக்கல் நாட்டல்

■ பி.கேதீஸ்

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், தலவாக்கலை, கொரின் தோட்டத்தில் 20 தனி வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சக்திவேல் நாட்டினார்.

இந்நிகழ்வில், கொட்டக்கலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாந்த், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொரின் வட்டார அமைப்பாளர் பிலிப், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி அமைப்பாளர் கிஷோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மொனராகலையில்

# இரண்டு நாள்களில் 251 தொற்றாளர்கள்

■ சுமணசிறி குணதிலக

மொனராகலை பிரதேச சுகாதார அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 2 நாள்களில், 251 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, மொனராகலை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் துஷித அத்தநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, இதுவரை மொனராகலை மாவட்டத்தில் 4,592 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 1,106 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

> **மொனராகலை, பிபிலை, மெதகம, கதிர்காமம் பகுதிகளில் அதிக தொற்றாளர்கள்**

மேலும், மொனராகலை, பிபிலை, மெதகம, கதிர்காமம் ஆகிய பகுதிகளிலேயே அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது மெதகம, புத்தல, வெல்லவாய ஆகிய வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில்

# அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நுண்நிதிக் கடன் பெறுநர்கள்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தொற்றால், மாத்தளை மாவட்டத்தில் நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுள்ள பெண்கள் உள்ளிட்டவர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நாட்டில் வறுமைக் கோட்டில் வாழ்பவர்களை இலக்காக வைத்து பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டாலும் தற்போது நாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோரால் நுண்நிதிக் கடன் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா தொற்றால் பயணக்கட்டுப்பாடுகள், முடக்கம் என்பவற்றுக்கு மத்தியில், கடனைப் பெற்று வர்த்தக நிலையங்களை ஆரம்பித்தவர்கள், வேறு பல தேவைகளுக்காக நுண்நிதியைப் பெற்றவர்கள் தற்போது, கடனையோ தவணைக் கட்டணத்தையோ செலுத்த முடியாத நிலையில், கடனைச் செலுத்தத் தாமதமாகும் போது, அதிக வட்டியை அறவிடுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் சில இடங்களில் கடனை அல்லது தவணைக் கட்டணத்தை அறவிட வருபவர்கள்,

> **நுண்நிதி கடன் வழங்கிய நிறுவனங்கள் சில 12% முதல் 35% வட்டி அறவிடுகின்றன**

கடனைப் பெற்ற பெண்களை பல்வேறு நெருக்கடிகளுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில நிறுவனங்கள் 12 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையான வட்டி அறவிடுவதாகவும் இதனால் நுண்நிதிக் கடனைப் பெற்றவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் மாத்தளை பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ‘தரகர்களுக்கு பாடம் புகட்டுவோம்’

## திகாம்பரம் எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்

அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு மலையகத்திலிருந்து சிறார்களை வீட்டுவேலைக்கு அழைத்துச்செல்லும் தரகர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டியுள்ளது என தெரிவித்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், “ரிஷாட் பதியுதீன் வீட்டில் வேலைசெய்த சிறுமி, தீ மூட்டிக்கொண்டாரா அல்லது, தீ வைத்து கொளுத்தப்பட்டாரா? என்பது தொடர்பில் கண்டறியப்பட வேண்டும். அத்தோடு, சிறார்களை வேலைக்கு அழைத்துச் செல்வது ஆட்கடத்தலுக்கு ஒப்பான செயலாகும்” எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



பாராளுமன்ற உறுப்பினர் வீட்டில், சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி வேண்டி, ஹட்டனில் நேற்று (21) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்று, கருத்து வெளியிடுகையிலேயே திகாம்பரம் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“இச்சம்பவம் தொடர்பில் அனைத்து விடயங்களும் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். அதன் பின்னணியில் செயற்பட்ட அனைவருக்கும் தக்க தண்டனை வழங்கப்படவேண்டும். உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து, இது தொடர்பில் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். அனைவருக்கும் கஷ்டம் உள்ளது. அதற்காக சிறார்களை வேலைக்கு அனுப்புவதை அனுமதிக்க முடியாது. மலையகத்தில் இருந்துதான் சிறார்கள் வீட்டு வேலைக்கு செல்கின்றனர். இதன் பின்னணியில் செயற்படும் தரகர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும்” என்றார்.

# நம்பிக்கையின்மையை வென்று மக்களின் வயிற்றிலடிக்கக் கூடாது

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை, மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்துக்கு வெற்றியாக இருப்பினும் மக்களுக்குத் தோல்வியாகும்.

மிகவும் இக்கட்டான காலகட்டங்களில் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்தன் மூலமாக, பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, வருமானமின்றி வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கும் சூழ்நிலை; வேலைக்குச் சென்றாலும் பல கழிவுகளுக்குப் பின்னர் கையில் கிடைக்கும் சொற்ப சம்பளம்; மேலதிக கொடுப்பனவுகள் இல்லாத நிலை எனத் தொடர்கையில் எரிபொருள்களின் விலையேற்றத்தை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

அதற்கெதிராக, எதிரணியினர் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு பல்வேறு வழிகளிலும் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். எனினும், வலுசக்தி அமைச்சருக்கும், ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவுவதால், நம்பிக்கையின்மையை வெற்றி கொள்ளமுடியும் என்ற நப்பாசையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்திருக்கக்கூடும்.

ஆனாலும், நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றிலிரண்டு பெரும்பான்மையில் வெற்றிகொண்டு விட்டோம் என்ற திமிரில், மக்களின் வயிற்றிலடித்து விடக் கூடாது.

பெசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர், தங்களுக்குக் கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே எரிபொருள்களின் விலைகளைக் குறைப்போமென கூறியிருக்கின்றார். அந்த முதலாவது சந்தரப்பம், அடுத்த தேர்தலுக்கான பிரசார மேடையாக அமைந்துவிடக்கூடாது. ஏனெனில், அதற்கு முன்பாக முதலாவது சந்தர்ப்பங்கள் பல, அரசாங்கத்துக்கு கிடைக்கும். அதேநேரம், எரிபொருள்களின் விலை குறைப்புக்கு ஏற்றவகையில், ஏனைய பொருள்களின் விலைகளையும் குறைக்கவே வேண்டும்.

இலங்கை வரலாற்றில் தனக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோல்வியைத் தழுவிக்கொண்டராக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் மட்டுமே காணப்படுகின்றார். நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட 47ஆவது நம்பிக்கையில்லாப் பிரேரணையே, அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரானதாகும். அதில், 46 நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் தோல்வியடையச் செய்யப்பட்டுவிட்டன.

எதிரணியைச் சேர்ந்த சிலரின் ஆதரவுடன், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை வெற்றிக்கொண்ட அரசாங்கம், அமைச்சர் ஒருவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேணையை வெற்றிகொள்வதன் ஊடாக, உள்வீட்டுக்குள் புகையவில்லை என்பதைப் படம்பிடித்து காட்டுவது, அரசாங்கத்துக்கு ஒன்றுமே புதியவை அல்ல.

எரிபொருள்களின் பாவனை குறைந்தமையால், அரசாங்கத்தின் வருமானம் குறைந்துள்ளது. இதேவேளை, எரிபொருள்களின் விலையேற்றத்தால் மக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இவை இரண்டையும் கவனத்தில் எடுத்து, அடுத்த தீர்மானத்தை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அதேபோன்று, மக்கள் மீது சுமையைத் திணிக்கவிடாது, அரசாங்கத்துக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்துக் கொண்டே இருப்பதற்கான மாற்று வழிகளைக் கையாண்டு கொண்டே இருக்கவேண்டியது, எதிரணியினரின் பொறுப்பாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சில சந்தர்ப்பங்களில் ஆணவம், மிடுக்கு, செருக்கு ஆகியவை தேவைப்படுகின்றன. ஆனால், இது நல்ல குணங்கள் அல்ல. எங்களை உறுதியாக வைத்திருக்கவே இந்த நிலை தேவைப்படுகின்றது. இந்த வேடங்கள், அவசியமான தருணங்களில் உருவாகியும் விடுகின்றது.

நீங்கள் திறமைசாலியாகவும் இரக்கம் உள்ளவராகவும் உங்களைக் காட்டிக் கொள்ளாமல் இருந்தால், அதைச் சிலர் சாதகமாக்கிக் கொள்ள எத்தனிப்பாளர்கள். அவர்கள் எடுத்தெறிந்தும் பேசுவார்கள்; கிண்டல், கேலி போன்ற காரியங்களையும் செய்வார்கள்.

மிடுக்காக உங்களைக் காட்டிக் கொள்ளாவிட்டால், பேர்வழிகள் தொடர்ந்தும் அருவருப்பாகவே இருப்பார்கள்.

எனவே, ஆணவம், மிடுக்கு போன்ற ஆயுதங்களைக் கையாளவேண்டி வரும். எல்லைமீறி நடக்க இடமளிக்கலாகாது.

பருத்தியூர் பால- வயிரவநாதன்

# சிறுமியை தீயில் தள்ளிய கொடுங்கரங்கள்



புருஜோத்தமன் தங்கமயில்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் கொழும்பிலுள்ள வீட்டில் பணிபுரிந்த நுவரெலியா, டயகமவைச் சேர்ந்த சிறுமி ஹிஸாலினி தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அண்மையில் உயிரிழந்தார்.

ஆரம்பத்தில் தற்கொலை முயற்சி என்று கூறப்பட்டாலும், முக்கிய பிரமுகர் ஒருவர் வீட்டில் பணிபுரியும் சிறுமியின் கைக்கு, மண்ணெண்ணெயோ அல்லது ஏதோவோர் எரிபொருளோ எப்படிக் கிடைத்தது என்று ஆரம்பித்து, பல சந்தேகங்கள் தொடர்ச்சியாக எழுந்தன. அந்தச் சந்தேகங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக, மரண விசாரணை அறிக்கையும் வெளியாகி இருக்கின்றது. சிறுமி, பாலியல் ரீதியான வன்முறைகளை எதிர்கொண்டிருந்தமை, அதில் வெளிப்பட்டிருக்கின்றது.

இலங்கையில், 16 வயது வரையில் அனைவரும் கட்டாயக் கல்வியைப் பெற வேண்டும் என்கிறது சட்டம். ஆனால், 14 வயது நிரம்பியவர்கள் வேலைக்குச் செல்லலாம் அல்லது அமர்த்தப்படலாம் என்றும் இன்னொரு முரணான விடயத்தை, சட்டம் தன்னுள்ளே வைத்திருக்கின்றது.

இந்த முரணைச் சரிசெய்யும் நோக்கில், வேலைக்கு செல்லும் வயதை, 16ஆக அதிகரிக்கும் சட்டமூலத்துக்கான அமைச்சரவைப் பத்திரத்தை, 2020ஆம் ஆண்டு அரசாங்கம் ஏற்றிருந்தது. ஆனால், அந்தச் சட்டமூலம் கொவிட்-19 பெருந்தோற்றுக் காலத்தில் நிறைவேற்றப்படாமல் காணாமற்போனது.

பாராளுமன்றத்தில் தங்களுக்குத் தேவையான அனைத்துச் சட்டத்திருத்தங்களையும் நிறைவேற்றிய அரசாங்கம், இந்தவிடயத்தில் தவறியது. அதுதான், 15 வயது நிரம்பிய ஹிஸாலினியை வீட்டுப் பணிப்பெண்ணாகச் சேர்த்துக் கொள்வதற்கான சட்டத் தடையை இல்லாமல் செய்திருக்கின்றது.

இவ்வாறான கவனயீனங்களும், பொறுப்பற்ற தனங்களாலும் கொழும்பு உள்ளிட்ட நகரப் பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான சிறுமிகள் பணிப்பெண்களாக அனுப்பப்படுகிறார்கள். அங்கு அவர்கள் தங்களுடைய வயதுக்கு மீறிய பணிச்சுமையையும் உடல் ரீதியான வன்முறைகளையும் எதிர்கொள்கிறார்கள்.

சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக சென்று, அங்கு கொடூரமாக மரண தண்டனையை எதிர்கொண்ட ரிஷானா நபீக்குக்கு அப்போது 17 வயது. ஆனால், உள்நாட்டிலேயே, அதுவும் மக்கள் பிரதிநிதி ஒருவர் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்து மரணித்திருக்கின்ற ஹிஸாலினியின் வயது 16. இங்கு இருவரும் சிறுமிகளே. வயதுக்குப் பொருந்தாக சூழலில் பணிக்கு அமர்த்தப்பட்டு பலிவாங்கப்பட்டு இருக்கின்றார்கள்.

> **மனைவி, பிள்ளைகள் மீதே வன்முறைகளைப் புரிபவர்களைத் தண்டிக்காத சமூக மனநிலை, வீட்டுப் பணிப்பெண்கள் மீதான வன்முறைகளை எவ்வாறு கண்டுகொள்ளும் என்பது மேலான கேள்வியாகும்**

ரிஷானா நபீக் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அதுவேகூட மனித உரிமைகளின் தடத்தில் அணுகப்படாத நிகழ்வு. கிட்டத்தட்ட அதுவும் ஒரு படுகொலையே. ஆனால், ஹிஸாலினியின் மரணத்தில் அயோக்கியத்தனமான கரங்கள் நீண்டிருப்பதற்கான காட்சிகள் வெளிப்படுகின்றன.

"...எனது மகள் நெருப்புக்கு பயப்பிடுபவர். அவர் தீமூட்டிக் கொள்ளவில்லை; தீமூட்டியுள்ளனர். 'இங்கு வேலை செய்ய முடியாது அழைத்துச் செல்லுங்கள்; இங்கு வேலை செய்பவர் என்னைத் தும்புத்தடியால் தாக்குகிறார்' என மகள் இறுதியாகக் கூறினார். அவர் சிறிய பிள்ளை; தாக்க வேண்டாமெனக் கூறுங்கள் என்று மெடத்திடம் (ரிஷாட்டின் மனைவியிடம்) கூறினேன். மகளே ஏதேனும் செய்திருப்பார் எனக் கூறுவதாக இருந்தால், அந்தவீட்டில் ஏதோ நடந்துள்ளது..." என்று ஹிஸாலினியின் பெற்றோர் கூறியிருக்கின்றனர்.

ரிஷாட் பதியுதீனின் வீட்டில், சிறுமி ஹிஸாலினி தாக்கப்பட்டமை தொடர்பில், ரிஷாட்டின் மனைவியிடம் முறையிட்டுள்ளதாக சிறுமியின் பெற்றோர் கூறுகின்றனர். அப்படியானால், சிறுமி மீதான வன்முறை தொடர்பில், ஏற்கெனவே அறிந்திருந்த ரிஷாட்டின் மனைவி, அது குறித்து எந்த நடவடிக்கையையாவது எடுத்தாரா? எடுத்திருந்தால், அந்தச் சிறுமியின் மரணம் நிகழாமல் தடுக்கப்பட்டிருக்கும் இல்லையா? என்ற கேள்விகள் நிராகரிக்க முடியாதவை.

அரசியல் ரீதியான நெருக்கடிகளை, ரிஷாட் பதியுதீன் தற்போது எதிர்கொண்டிருக்கின்றார். சிறுபான்மை இனமொன்றின் தலைவராக அவர் மீதான ஜனநாயக மீறல்களை, சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்ப்பதும், போராடுவதும் அனைவரதும் கடமை.

அதேபோல, அவரது வீட்டுக்குள் சிறுமி ஒருவருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் தொடர்பிலும், மரணத்துக்கான உண்மையான காரணங்களைக் கண்டறிவதும் அவசியமானது. அதனை, எந்தக் காரணம் கொண்டும் தவிர்த்துவிட முடியாது. அப்படியான நிகழ்வுகளுக்கு அல்லது பொய் பித்தலாட்டங்களுக்கு யாராவது துணை போகிறார்கள் என்றால், அவர்கள் சிறுமியின் மரணத்தின் பங்காளிகளாவார்கள்.

இன்றைக்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியோ, அதன் பங்காளிகளோ சிறுமி ஹிஸாலினியின் மரணம் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான், சிறுமியின் மரணத்தை ரிஷாட்டுக்கு எதிரான சதி வலை எனும் நோக்கில் பேசுகிறார்.

> **அரசாங்கமோ, வேறு எந்தத் தரப்போ தனிப்பட்ட நலன்களை அடைய முயற்சிக்கலாம். அதை நிராகரிக்க முடியாது. ஆனால், அதற்காக சிறுமியின் மரணத்தை அப்படியே விட்டுவிட்டு நகர முடியாது**

இந்த மரணத்தை வைத்து, அரசாங்கமோ, வேறு எந்தத் தரப்போ தனிப்பட்ட நலன்களை அடைய முயற்சிக்கலாம். அதை நிராகரிக்க முடியாது. ஆனால், அதற்காக சிறுமியின் மரணத்தை அப்படியே விட்டுவிட்டு நகர முடியாது. அது, தொடர்ச்சியாக இவ்வாறான மரணங்களை ஊக்குவிக்கும் நடவடிக்கையாகும்.

பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கு எதிரான வீட்டு வன்முறையை, வாழ்வின் ஓர் அம்சமாகவே இலங்கை போன்ற நாடுகள் கொண்டு சுமக்கின்றன. எவ்வளவு சட்டங்களை இயற்றினாலும், வீட்டு வன்முறைகளை, பாரம்பரிய நெறியாகக் கருதி முன்னெடுக்கின்றவர்கள் இன்னமும் ஏராளம் பேர் உண்டு. தன்னுடைய மனைவி, பிள்ளைகள் மீதே இவ்வாறான வன்முறைகளைப் புரிபவர்களை தண்டிக்காத சமூக மனநிலை, வீட்டுப் பணிப்பெண்கள் மீதான வன்முறைகளை எவ்வாறு கண்டுகொள்ளும் என்பது மேலான கேள்வியாகும்?

பெரிய வசதி வாய்ப்புகளுக்காக வீட்டுப் பணிப்பெண்களாக யாரும் செல்வதில்லை. வறுமையும் பசி நெருக்கடியும் இவ்வாறான பணிகளை நோக்கி, பெண்களைத் தள்ளுகின்றன.

வேலைக்குச் செல்லும் இடங்களில் ஒழுங்கான தங்குமிடம், உணவு, ஊதியம் இன்றி, சமயலறை, குளியலறை ஓரங்களில் படுத்துறங்கி உழைக்கும் ஆயிரக்கணக்கான சிறுமிகளும் பெண்களும், ஹிஸாலினி எதிர்கொண்டது மாதிரியான வன்முறைகளை நாளாந்தம் எதிர்கொள்கிறார்கள்.

இலங்கையில் வீட்டுப் பணிப்பெண்களின் மரணங்கள் அடிக்கடி பதிவாகின்றன. மாடியில் இருந்து குதித்து இறந்தவர்களாக, திருட்டை மறைப்பதற்காக தற்கொலை செய்தவர்களாக என்று அந்த உயிரிழப்புகள் சட்டத்தின் முன்னால் கட்டப்பட்டு அல்லது, பெரும் பணத்தின் முன்னால் ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்டுமிருக்கின்றன.

சிறுமி ஹிஸாலினியின் மரணத்தையும் அவ்வாறான ஒழுங்கொன்றின் ஊடாகக் கடந்துவிட முடியும் என்று ரிஷாட் பதியுதீனின் தரப்பினர் நினைக்கலாம். அவ்வாறான முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டுகின்றார்.

அதனாலேயே, சிறுமியின் மரணத்தை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரியின் நடவடிக்கைகள் மீது சந்தேகம் எழுப்பியிருக்கின்றார்.

அதிக தருணங்களில் வலியவர்களின் நீதி, அதிகாரத்தாலும் பணத்தாலும் வரையறுக்கப்படுகின்றன. அது, எளியோரை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.

இன்றைக்கு, சிறுமி ஹிஸாலினியின் மரணத்தை முறையாக விசாரித்து, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதைத் தடுக்க முயற்சிக்கும் அனைத்துத் தரப்பினரும் வலியோருக்கான ஏவல் அடிமைகளே ஆவார்.

## கடிதங்கள்

### குளத்து நீரை மீன்பிடிப்புக்காக வீணே திறந்துவிடலாமா?

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை கமநல சேவைப்பிரிவுக்கு உட்பட்ட காஞ்சிரமோட்டை குளத்தில், மீன்பிடிப்பதற்கான அனுமதி, குத்தகைத்தாரர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளமையால், அவர்கள் நீரைத் திறந்துவிட்டு, மீன்பிடியில் ஈடுபடுவதால், குளத்தின் தண்ணீர் வீண் விரயமாக்கப்படுகிறது. இதனால் கால்நடைகளுக்கு தண்ணீர் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாக, கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்களும் விவசாயிகளும் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இது குறித்து, முள்ளியவளை கமநல சேவை நிலைய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை காலமும் குளத்து நீரைத் திறந்து விட்டு, மீன்பிடிக்கவே குத்தகைக்கு வழங்கிவருகின்றோம். இதனால் பிரச்சினை என்று எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

காஞ்சிரமோட்டை குளத்தின் கமக்கார அமைப்பின் தலைவர் து. காந்தன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது, "காஞ்சிரமோட்டை குளத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர், குளத்தை அரசவருமானத்துக்காக மீன்வளர்ப்பதற்கு குத்தகைக்கு கொடுத்து, மீன்பிடிக்காக குளத்தின் கொட்டைத் திறந்துவிடுவது வழமையாகும்; விவசாய அமைப்புகளின் தீர்மானமும் இதுதான். குளத்தின் கொட்டுக்கு மேல் அரை அடி தண்ணீர் விட்டுத்தான், குளத்தின் கொட்டு திறக்கப்படுகின்றது. காஞ்சிரமோட்டை, நீராவிகுளம், பெரியபுளியங்குளம் ஆகியவற்றில் தலா பத்தாயிரம் மீன்குஞ்சுகளைப் பணம் கட்டி விட்டுள்ளோம். இதற்கான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்றார்.

இதேவேளை, குளத்தில் சேமிக்கும் நீரை வீணாகத் திறந்துவிடுவதும் கழிவில் விடுவதும் குளத்து நீரைத் துஷ்பியோகம் செய்யும் நடவடிக்கையாகும் என்பதுடன், இது சட்டவிரோதமுமாகும் எனவும் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களும் விவசாயிகளும் தெரிவிக்கின்றார்கள்.

-முல்லை கீதன்




கேரளா

# பெண்களை காக்கும் 'பிங்க்'

கேரளாவில் கொரோனா ஊரடங்குக் காலம் தொடங்கியதிலிருந்து பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, மாநிலத்தில் பெண்களின் பாதுகாப்பு, உரிமை, இணைய சுதந்திரம் ஆகியனவற்றைப் பாதுகாக்கும் வகையில் பிங்க் ப்ரொடக்சன் (Pink Protection ) என்ற திட்டத்தைக் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்துள்ளார்.

இதற்காக 10 கார்கள், 40 மோட்டார் சைக்கிள்கள், 20 சைக்கிள்களைப் பொலிஸாருக்கு முதலமைச்சர் ஒதுக்கியுள்ளார். இச் சிறப்புப் படையானது வீதிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பெண்கள் தைரியமாகப் பொலிஸாரிடம் தாம் எதிர்நோக்கும் இன்னல்களைத் தெரிவிக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இது குறித்து முதலமைச்சர் பினராயி விஜயன், "இந்தப் புதிய திட்டத்தின்படி, வீடுகளுக்கே நேரடியாகச் சென்று குடும்ப வன்முறை தொடர்பான தகவல்களைப் பொலிஸார் பெறுவர். இக்குழுவில் உள்ள அதிகாரிகள், பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து, அவர்கள் பகுதியில் ஏதேனும் குடும்ப வன்முறை பிரச்சினைகள் இருக்கிறதா என்பதைக் கண்டறிவர்" என்றார்.



தமிழகம்

## தி.மு.க வை நோக்கி படையெடுக்கும் அ.தி.மு.கவினர்

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க தலைமையிலான ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து, பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் தி.மு.கவில் இணைந்து வருகின்றனர்.

அந்தவகையில் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் வ.து.நடராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தராஜன் உட்பட 300 பேர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் நேற்றைய தினம் (21) இணைந்தனர். அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில், கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சாவூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அ.தி.மு.க, அ.ம.மு.க நிர்வாகிகளும் தொண்டர்களும் தி.மு.கவில் இணைந்தனர்

உத்தர பிரதேசம்

## மருத்துவமனைகளில் குட்டி மதுபானசாலைகள்



உத்தர பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் 45 தனியார் மருத்துவமனைகளில் நேற்று முன்தினம் (20) பொலிஸாரால் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது குளிர்சாதனப் பெட்டிகளில் மதுபானப் போத்தல்கள் இருந்ததைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

உத்தர பிரதேசம், லக்னோவில் கொரோனாத் தொற்றின் பரவல் காரணமாகத் தனியார் மருத்துவமனைகளிலும் ஆயிரக்கணக்கானோர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதில்பெரும்பாலான மருத்துவமனைகளில் கட்டணம் அதிகமாகக் காணப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பா.ஜ.க அரசாங்கத்துக்கு புகார்கள் குவிந்தன.

இதையடுத்து 45 தனியார் மருத்துவமனைகளில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது.

இதில் அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகியுள்ளன. அரசு உரிமம் இல்லாமலும் அல்லது அரசு உரிமம் புதுப்பிக்கப்படாமலும் பெரும்பாலான மருத்துவமனைகள் இயங்கி வந்துள்ளதாகவும், குறிப்பாக சில மருத்துவமனைகளிலுள்ள குளிர்சாதனப் பெட்டிகளில் மதுபானப் போத்தல்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அம் மருத்துவமனைகளை உடனடியாக மூடுமாறு, லக்னோ மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

ஆந்திரா

## திருப்பதிக்கு வழங்கப்பட்ட 60 கிலோகிராம் உண்டியல்

திருப்பதி அருகே உள்ள கொப்பரவந்தலப் பள்ளியைச் சேர்ந்த கொப்பேரா சாய்சுரேஷ், கொப்பேரா குமார் ஆகியோர் நேற்று (21) திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்கு 60 கிலோகிராம் நிறையுடைய செம்பும் இரும்பும் கலந்து செய்யப்பட்ட உண்டியலை தேவஸ்தான அதிகாரிகளிடம் நன்கொடையாக வழங்கினர்.

குறித்த உண்டியலானது இந்திய மதிப்பில் ரூபாய் ஒரு இலட்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 200 ஆண்டுகளாகத் தங்கள் குடும்பத்தினர் இதுபோன்ற உண்டியல்களை இக் கோவிலுக்கு வழங்கி வருவதாகத் தெரிவித்தனர்.



# ஹஜ் பெருநாள் தொழுகைகள்

## ஹஜ் பெருநாள் தொழுகைகள், கொவிட்-19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி, நாடு பூராவும் நேற்று (21) சிறப்பாக நடைபெற்றன. அவற்றில் சில பதிவுகள் இங்கே

மட்டக்களப்பு





மட்டக்களப்பு, ஜாமியுஸ் ஜலாம் ஜூம்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற பிராதன பெருநாள் தொழுகையை பள்ளிவாயிலின் பேஸ் இமாம் மௌலவி எம் நியாஸ் நடத்தினார்.

ரீ.எல்.ஜவ்பர்கான்

ஹட்டன்





ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலில் பெருநாள் தொழுகை மௌலவி சாஜகானால் நிகழ்த்தப்பட்டது.

கே. சுந்தரலிங்கம்

இறக்காமம்





'முபாரக் டெக்ஸ்' குழும தலைவர் எம்.எம். முபாரக்கால் இன்று திறந்துவைக்கப்பட்ட இறக்காமம், கொக்கிலங்கால் பள்ளிவாசலில், ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் மௌலவி றாபி எஸ். மப்ராஸால் (நளிமி) நிகழ்த்தப்பட்டது.

எஸ். அஷ்ரப்கான்

யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம், மர்யம் பள்ளிவாசலின் ஏற்பாட்டில், ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை, யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் மௌலவி எம்.ஏ. பைசர் (மதனி) தலைமையில் நடைபெற்றது.

என்.எம். அப்துல்லாஹ்

கந்தளாய்



கந்தளாய், இலாஹிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகளை முஹம்மட் ஸவாஹிர் மௌலவி நடத்தியிருந்தார்.

எப். முபாரக்

காத்தான்குடி



புதிய காத்தான்குடி அல் அக்ஷா ஜும்ஆப் பள்ளிவாசலில், ஹஜ் பெருநாள் தொழுகையையும் பெருநாள் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அல்ஹாபிழ் எம். இல்ஹாம் நடத்தினார்.

எம்.எஸ்.எம். நூர்தீன்



மாளிகைக்காடு



மாளிகைக்காடு, அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் பள்ளிவாசல் பேஸ் இமாம் நிகழ்த்தினார்.

மன்னார்



மன்னார், மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது.

எஸ். றொசேரியன் லெம்பேட்



நீர்கொழும்பு



நீர்கொழும்பு ஜும்மா மஸ்ஜித் பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை மௌலவி பர்ஸான் (ஈமானி) உம் பெருநாள் குத்பாவை மௌலவி பாரிஸ் (ரஸாதி) உம் நிகழ்த்தினார்கள்.

நீர்கொழும்பு நிருபர் ஷாஜஹான்

தோப்பூர்

திருகோணமலை, தோப்பூர் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில், ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை பள்ளிவாசலின் இமாம் எஸ்.ஏ. அமீன் மௌலவி நிகழ்த்தினார்.

தீஷான் அஹமட்



வவுனியா

## வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற ஹஜ் பெருநாள் தொழுகை





வவுனியா, பட்டாணிசூர் முகைதீன் ஜும்மா பெரியபள்ளிவாசலில் மௌலவி ஏம்.அமீனுதீன் தலைமையில் தொழுகை நடைபெற்றது.

க. அகரன்

சீனா

1,000 ஆண்டுகளில் இல்லாத மழை;

# மூழ்கிய மத்திய சீன மாகாணம்

சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தின் பெருமளவான பகுதிகள் நேற்று (21) மூழ்கியுள்ளன.

ஹெனான் மாகாணத்தின் தலைநகரான ஸெங்ஸூவே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1,000 ஆண்டுகளில் இல்லாத கடும் மழையாலேயே இப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மஞ்சள் ஆற்றின் கரையிலுள்ள ஸெங்ஸூ நகரத்தில் சுரங்கப்பாதை ஒன்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் 12 பேர் இறந்ததோடு, 500க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக உள்ளூராட்சி அமைப்புகள் தெரிவித்துள்ளன.



சனிக்கிழமை (17) மாலையிலிருந்து நேற்று முன்தினமிரவு வரை ஸெங்ஸூவில் 617.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.



## வெளிப்படுத்திய ரஷ்யா...

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு வெளியே நேற்று முன்தினம் நடைபெற்ற விமானக் கண்காட்சியில், புதிய ஐந்தாவது தலைமுறை தாக்குதல் ஜெட்டான செக்மேட்டை ரஷ்யா வெளிப்படுத்தியுள்ளது.

ஐ. அமெரிக்கா

## விண்வெளிக்கு சென்ற பெஸோஸ்

உலகின் பணக்காரரான ஜெஃப் பெஸோஸ், தனது புளூ ஒரிஜின் நிறுவனத்தின் நியூ ஷெப்பர் ஏவல் வாகனத்தில், ஐக்கிய அமெரிக்காவின் டெக்ஸாஸ் பாலைவனத்துக்கு மேலே, 107 கிலோமீற்றர் நேற்று முன்தினம் (20) மேலெழுந்து பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியுள்ளார்.

அமெஸொனின் நிறுவுநரான பெஸோஸுடன் உலகின் மிக வயதான விண்வெளிப் பயணியான 82 வயதான விண்வெளி முன்னோடியான வோலி பங்கும், மிகவும் வயது



குறைந்த விண்வெளிப் பயணியான 18 வயதான ஒலிவியர் டயமென்னும், பெஸோஸின் சகோதரரான மார்க் பெஸோஸும் பயணித்திருந்தனர்.

10 நிமிடங்களும் 10 செக்கன்களும் நீடித்திருந்த குறித்த பயணமானது முழுவதும் தன்னியக்கமாகவே நிகழ்ந்திருந்தது.

நைஜீரியா

## கடத்தப்பட்ட 100 பெண்கள், குழந்தைகள் விடுவிப்பு

கொள்ளைக்காரர்களால் கடத்தப்பட்ட 100 பெண்களையும் குழந்தைகளையும் விடுவித்துள்ளதாக வட மேற்கு நைஜீரியாவிலுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸம்ஃபாரா மாநிலத்திலிருந்து கடந்த மாதம் எட்டாம் திகதி இவர்கள் கடத்தப்பட்டிருந்ததுடன், அச்சம்பவத்தின்போது



நால்வர் உயிரிழந்திருந்தனர்.

இவர்கள் எதுவித பணயத் தொகையும் செலுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டதாக ஸம்ஃபாரா மாநில அரசாங்கம் தெரிவித்தபோதும், மேலதிக தகவல்கள் எவையும் வெளிப்படுத்தப்படவில்லை.

அவுஸ்திரேலியா

படுக்கை விரிப்பால்

## தனிமைப்படுத்தலில் இருந்து தப்பிய நபர்



படுக்கை விரிப்புகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கயிறு ஒன்றைப் பயன்படுத்தி, நான்காவது மாடி ஹொட்டல் அறையிலிருந்து கீழிறங்கி, அவுஸ்திரேலிய தனிமைப்படுத்தலிருந்து நபரொருவர் தப்பித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிறிஸ்பேணிலிருந்து மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு திங்கட்கிழமை (19) பிற்பகலில் சென்றிருந்த குறித்த நபர், மேற்கு அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கான விதிவிலக்குகளைச் சந்திருக்கவில்லை என மேற்கு அவுஸ்திரேலிய பொலிஸ் படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேற்கு அவுஸ்திரேலியாவை விட்டு 48 மணித்தியாலத்துக்குள் வெளியேறுமாறு குறித்த நபருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், அன்றிரவு தனிமைப்படுத்தல் ஹொட்டல் ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அந்தவகையில், நள்ளிரவையடுத்து தப்பித்த குறித்த நபர், நேற்று முன்தினம் காலையில் பிடிபட்டுள்ளார்.

ஐ. அமெரிக்கா

இந்திய உணவுக்காக

## மகாராணியுடனான தேநீரைத் தவிர்த்த கிளின்டன்

மகாராணி எலிஸபத்துடனான தேநீர், பிரித்தானிய பிரதமரின் உத்தியோகபூர்வ பண்ணை வீட்டில் இரவுணவு என்பவற்றை இந்திய உணவு உண்பதற்காக ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் தவிர்த்ததாக முன்னாள் இரகசிய ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

பிரித்தானியப் பிரதமராக டொனி பிளேயர் 1997ஆம் ஆண்டு இருக்கும்போது, பிரித்தானியாவுக்கான முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் உத்தியோகபூர்வ விஜயத்தின்போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இலங்கைக்கு எதிரான தொடரை

# இந்தியா கைப்பற்றியது

இலங்கைக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். இலங்கையணி சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய இசுரு உதானவை கசுன் ராஜித பிரதியிட்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, அவிஷ்க பெர்ணான்டோ, மினோத் பானுக மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. எனினும், மினோத் பானுக 36 (42) ஓட்டங்களுடனும், அடுத்து வந்த பானுக ராஜபக்ஷ ஓட்டமெதுவும் பெறாமலும் அடுத்தடுத்து யுஸ்வேந்திர சஹாலிடம் வீழ்ந்தனர்.

இதையடுத்து அவிஷ்க பெர்ணான்டோவும், தனஞ்சய டி சில்வாவும் இனிங்ஸை கட்டியெழுப்பிய நிலையில், 50 (71) ஓட்டங்களுடன் அவிஷ்க பெர்ணான்டோவும், 32 (45) ஓட்டங்களுடன் தனஞ்சய



டி சில்வாவும் குறிப்பிட்ட இடைவெளிகளில் புவ்னேஷ்வர் குமார், தீபக் சஹரிடம் வீழ்ந்தனர்.

தொடர்ந்து வந்த சரித் அஸலங்கவும், தசுன் ஷானகவும் இலங்கையின் இனிங்ஸை மீளக் கட்டியெழுப்பிய நிலையில், 16 (24) ஓட்டங்களுடன் சஹாலிடம் தசுன் ஷானக வீழ்ந்தார். தொடர்ந்து வந்த வனிடு ஹஸரங்கவும் குறிப்பிட்ட நேரத்தில் தீபக் சஹரிடம் வீழ்ந்தார்.

எனினும், அஸலங்கவால் இனிங்ஸை நகர்த்திய இலங்கை, 65 (68) ஓட்டங்களுடன் அவரை புவ்னேஷ்வர் குமாரிடம் இழந்தது. அடுத்து வந்த துஷ்மந்த சமீரவும் புவ்னேஷ்வர் குமாரிடம் வீழ்ந்தபோதும், சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 44 (33) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

பதிலுக்கு, 276 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்திலேயே பிறித்திவி ஷா, இஷன் கிஷனை ஹஸரங்க, ராஜிதவிடம் இழந்தது. பின்னர் அணித்தலைவர் ஷீகர் தவானை 29 (38) ஓட்டங்களுடன் ஹஸரங்கவிடம் இழந்த இந்தியா, மனிஷ் பாண்டேயை 37 (31) ஓட்டங்களுடன் ரண் அவுட் முறையில் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் இழந்ததுடன், அடுத்து வந்த ஹர்டிக் பாண்டியாவையும் தசுன் ஷானகவிடம் உடனே பறிகொடுத்தது.

இதையடுத்து சூரியகுமார் யாதவ்வும், குருனால் பாண்டியாவும் இந்தியாவின் இனிங்ஸை மீளக் கட்டியெழுப்பிய நிலையில், 53 (44) ஓட்டங்களுடன் சூரியகுமார் யாதவ்வையும், 35 (54) ஓட்டங்களுடன் குருனால் பாண்டியாவையும் குறிப்பிட்ட இடைவெளிகளில் லக்ஷன் சந்தகான், ஹஸரங்கவிடம் இந்தியா இழந்திருந்தது.

எவ்வாறாயினும், புவ்னேஷ்வர் குமாரின் இணைப்பில், தீபக் சஹர் பெற்ற ஆட்டமிழக்காத 69 (82) ஓட்டங்களுடன், 49.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இந்தியா அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக தீபக் சஹர் தெரிவானார்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் நேற்று நடைபெற்ற மழை காரணமாக 49 ஓவர்கள் கொண்டதாக இடம்பெற்ற இப்போட்டியில் 133 ஓட்டங்களால் டக்வேர்த் லூயிஸ் முறையில் அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 252/9 (49 ஓவ. ) (துடுப்பாட்டம்: அலெக்ஸ் காரி 67 (87), அஸ்தன் தேணர் 49 (45), ஜொஷ் பிலிப் 39 (42), பென் மக்டர்மூட் 28 (48), மிற்செல் மார்ஷ் 20 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 5/39, அல்ஸாரி ஜோசப் 2/40, அகீல் ஹொஸைன் 2/50)

மேற்கிந்தியத் தீவுகள்: 123/10 (26.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: கெரான் பொலார்ட் 56 (57) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 5/48, ஜொஷ் ஹேசில்வூட் 3/11, மிற்செல் மார்ஷ் 1/7, அடம் ஸாம்பா 1/39)

போட்டியின் நாயகன்: மிற்செல் ஸ்டார்க்

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டியானது பார்படோஸில் நாளை நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.




பாகிஸ்தானுக்கு எதிரான

## தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மன்செஸ்டரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 1-2 என்ற ரீதியில் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 20) 6/154 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 57) 76), பக்கர் ஸமன் 20) 24), ஹஸன் அலி ஆ,இ 09) 15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 4] 35/4], மொயின் அலி 4] 19/1], லியான் லிவிங்ஸ்டோன் 3] 21/0], கிறிஸ் ஜோர்டான் 4] 30/0], டேவிட் வில்லி 2] 10/0])

இங்கிலாந்து: 4 .19) 7/155 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் றோய் 64 36)), டேவிட் மலன் 33) 31), ஜொஸ் பட்லர் 22) 21), ஒய்ன் மோர்கன் 12) 21) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஹஃபீஸ் 4] 28/3], இமாட் வசீம் 4] 25/1], ஷடாப் கான் 3] 22/1], உஸ்மான் குவாதிர் 4] 35/1], ஹஸன் அலி 3.4] 28/1])

போட்டியின் நாயகன்: ஜேஸன் றோய்

தொடரின் நாயகன்: லியாம் லிவிங்ஸ்டோன்

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில்

## வெள்ளையடித்தது பங்களாதேஷ்




ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் சிம்பாப்வேயை பங்களாதேஷ் வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என சிம்பாப்வேயை பங்களாதேஷ் வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

சிம்பாப்வே: 298/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: றெஜிஸ் சகப்வா 84 (91), றயான் பேர்ள் 59 (43), சிகண்டர் ராசா 57 (54), டியோன் மேயர்ஸ் 34 (38), பிரெண்டன் டெய்லர் 28 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஸ்தபிசூர் ரஹ்மான் 3/57, மொஹமட் சைஃபுடீன் 3/87, மகமதுல்லா 2/45, ஷகிப் அல் ஹஸன் 1/46, தஸ்கின் அஹ்மட் 1/48)

பங்களாதேஷ்: 302/5 (48 ஓவ. ) (துடுப்பாட்டம்: தமிம் இக்பால் 112 (97), நுருல் ஹஸன் ஆ.இ 45 (39), லிட்டன் தாஸ் 32 (37), ஷகிப் அல் ஹஸன் 30 (42), மொஹமட் மிதுன் 30 (57), அஃபிஃப் ஹொஸைன் ஆ.இ 26 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: வெஸ்லே மட்ஹெவெரே 2/45, டொனால்ட் ட்ரிபானோ 2/61, லுக் ஜொங்வி 1/44)

போட்டியின் நாயகன்: தமிம் இக்பால்

தொடரின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 22 ஜுலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.